# 108 திவ்யதேச ஸ்தலங்கள்



# 42. திருக்கோவலூர்



[Google Maps]

**நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்**
**பாயும் பணிமறைத்த பண்பாளா - வாயில்**
**கடைகழியா வுள்புகா காமர் பூங்கோவல்**
**இடைகழியே பற்றியினி - (*2167*)**

முதல் திருவந்தாதி - 86

என்று பொய்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்திருக்கோவலூர் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ளது. கடலூரிலிருந்து பேருந்து வசதிகள் உண்டு. விழுப்புரம்-காட்பாடி ரயில்பாதையில் திருக்கோவலூர் ஒரு நிலையமாகும். திருச்சியிலிருந்து வேலூர் செல்லும் பேருந்துகள் இவ்வூர் வழியாகச் செல்கின்றன.

## வரலாறு

பாத்ம புராணம், பிரம்மாண்ட புராணம் இவ்விரண்டும் இத்தலம் பற்றி விவரித்துப் பேசுகிறது. பகவான் தனது வாமன அவதாரத்தை தம்மைக் குறித்து தவமிருந்த முனிவர்கட்காக இத்தலத்தில் மீண்டும் ஒரு முறை

வாமன அவதாரத்தைக் காட்டிக் கொடுத்ததாக ஐதீஹம். பஞ்ச கிருஷ்ணச் ஷேத்திரங்களில் இதுவும் ஒன்றாகும். வாமன திருவிக்ரம அவதார ஸ்தலம் என்றும் இது அழைக்கப்படுகிறது. கிருஷ்ணன் கோவில் என்றே வடமொழி நூல்கள் குறிக்கின்றன. ஆழ்வார்களால் முதன்முதலாப் பாடப்பட்ட திவ்ய தேசம் இதுதான்.

பெருமாள் வாமன அவதாரம் எடுக்கும் முன்பே கிருஷ்ணக் கோவில் என்று பிரதானமாக வழங்கப்பட்ட இத்தலத்தின் தொன்மை பல சதுர்யுகங்கட்கு முந்தியதாகும். கோபாலன் என்னும் சொல்லே கோவாலன் எனத் திரிந்தது. அந்த ஆயனான கோபாலன் எழுந்தருளியுள்ள ஸ்தலமே திருக்கோவலூர் ஆயிற்று. தட்சிண பினாகினி எனப்படும் தென்பெண்ணையாற்றங்கரையில் இத்தலம் அமைந்துள்ளது.

மகா ஞானிகளும், நாரதரும், கின்னரங்களும் இந்தக் கிருஷ்ண ஷேத்திரத்தில் தவம் செய்தனரென்றும் தானும் இந்தச் ஷேத்திரத்தில் தவமியற்றியதாக கூறிய பிரம்மன், மார்க்கண்டேயரின் தந்தையான மிருகண்டு முனிவர் எம்பெருமானின் வாமன அவதாரத்தைக் காண விரும்பி தவமியற்றின ஸ்தலம் இதுதான் என்று பாத்ம புராணத்தில் எட்டு அத்தியாயங்களில் (பிரம்மன் கூறியதாக) இத்தல வரலாறு பேசப்படுகிறது.

முன்னொரு காலத்தில் மகாபலி என்னும் மன்னன் ஒருவன் தர்ம நியாயங்கட்கு கட்டுப்பட்டு ஆட்சி புரிந்து வந்தான். இருப்பினும் இம்மன்னன் தேவர்களைத்

துன்புறுத்தி அவர்கட்குத் தொடர்ந்து இன்னல்கள் விழைத்துவந்தான். அசுரர்களின் குருவான சுக்கிர பகவான் இம்மன்னனுக்கு குருவாக இருந்து இம்மன்னனுக்கு சர்வ சக்திகளையும் அளித்து தேவர்களைத் துன்புறுத்தவும் தூண்டிவந்தான்.

இந்தக் காலகட்டத்தில் புத்திரப் பேறில்லாத ரிஷி தம்பதியரான கசியபர், அதிதி ஆகிய இருவரும் திருமால் குறித்து புத்திர காமேஷ்டியாகம் செய்து வந்தனர்.

இந்நிலையில் மகாபலியின் துன்பம் பொறுக்க இயலாத தேவர்கள், திருமாலைத் துதித்து தம்மைக் காத்தருள வேண்டுமென விண்ணப்பிக்க, புத்திரப்பேறு வேண்டி மகாயாகம் செய்து கொண்டிருக்கும் கஸியபர் அதிதி தம்பதிகட்குப் புத்திரனாக அவதாரமெடுத்து மகாபலியை ஒழித்து உங்கள் இன்னல்களைப் போக்குகிறேன் என்று நல்லருள் புரிந்தார்.

ரிஷி தம்பதிகளின் யாகத்தை மெச்சிய விஷ்ணு அவர்கட்கு மகவாக அவதரித்து குட்டையான வடிவம் கொண்டவாமன மூர்த்தியாக வளர்ந்து பிரம்மச்சர்யத்தை மேற்கொண்டார்.

பிரம்மச்சர்யம் மேற்கொண்டதும் பூமிதானம் பெறுவதற்காக மாபலிச் சக்ரவர்த்தியிடம் வந்தார். குட்டையான வாமன ரூபத்தைக் கண்டு வியந்த மாவலி ஏளனங்கலந்த புன்னகையுடன் என்ன வேண்டுமென்று கேட்க எனக்கு மூன்றடி மண் வேண்டுமென வாமனன் கேட்க, இதென்ன பிரமாதம் இப்போதே தந்தேன் என்று

வாக்களித்து தாரை வார்த்து தானம் கொடுக்க ஆயத்தமானான்.

வந்திருப்பது ஸ்ரீமந் நாராயணன் என்றும், தனது சீடன் வீணாக வீழ்ந்துவிடப் போகிறான் என்பதை உணர்ந்த சுக்ராச்சார்யார் மாவலியிடம் உண்மை உணர்த்தி தானம் கொடுப்பதை நிறுத்தச் சொன்னார்.

கொடுத்த வாக்கை மீறாத குணம் படைத்த மாவலிதான் தானம் கொடுத்தே தீருவேன் என்றும் அவ்வாறு வந்திருப்பது ஸ்ரீமந் நாராயணனே எனில் அவருக்குத் தானம் கொடுப்பதும் தமக்குப் பெருமைதான் எனக் கூறி தாரை வார்க்கத் தொடங்கினான்.

இந்நிலையிலும் இதைத் தடுக்க நினைத்த சுக்ராச்சாரியார் ஒரு சிறிய வண்டின் வடிவமாக உருவெடுத்து தாரை வார்த்துக் கொடுக்கும் கமண்டலத்தின் துவாரத்தை அடைத்துக் கொண்டார். கமண்டல துவாரத்தை ஏதோ அடைப்பதையறிந்த வாமனன் ஒரு சிறிய நாணல் புல்லினையெடுத்து துவாரத்தின் வழியாகக் குத்த சுக்ராச்சாரியார் ஒரு கண்ணை இழந்தார்.

(இழந்த கண்ணை மீண்டும் பெறவும், செய்த பிழையின் பாவம் போக்கவுந்தான் சுக்கிரன் திருவெள்ளியங்குடியில் திருமாலைக் குறித்து தவமிருந்து தனது கண்ணை மீண்டும் பெற்றார் என்பது திருவெள்ளியங்குடி ஸ்தல வரலாறு ஆகும்)

மாவலி தாரை வார்த்துக் கொடுக்க தனது ஓரடியால் இந்த நிலவுலகு முழுவதையும் அளந்து மற்றோரடியை

விண்ணுயரத் தூக்கி விண்ணுலகம் முழுவதும் அளந்து, திருவிக்ரம அவதார கோலத்தில் நின்று தனது மூன்றாவது அடிக்கு இடம் எங்கே என்று கேட்டு நின்றார். வாமன வடிவத்தில் வந்தவர் நெடிதுயர்ந்த திருவிக்ரம அவதாரங்காட்டி நிற்பதைக்கண்ட மாவலி மனம் பதைத்து, தன் நிலையுணர்ந்து மன்னிப்பு வேண்டி தங்களது மூன்றாவது திருவடிக்கு எனது சிரசே இடம் என்று சரணாகதி அடைந்தார். தமது திருவடியை மாவலியின் சிரசில் வைத்த மாத்திரத்தில் பாதாள உலகஞ்சென்று சேர்ந்தான் மாவலி. தேவர்கள் பூமாரி பொழிய, பக்தர்களும், ஞானிகளும் ஆனந்த பஜனம் பண்ண, விண்ணுலகை நோக்கிய திருவடி பிரம்மனின் சத்திய லோகம் வரை செல்ல இதைக் கண்ட பிரம்மன் அரிதான எம்பெருமானின் திருவடி பாக்கியம் தனக்கு கிட்டியதை எண்ணி கமண்டல நீரால் பாத பூஜை செய்ய அதனின்றும் தெறித்த நீர்த்துளிகளே கங்கையாகப் பெருகியதென்பர்.

இவ்விதம் ஒரே நேரத்தில் வாமன, திருவிக்ரம அவதாரம் எடுத்த திருக்கோலக் காட்சியைக் கேள்விப்பட்ட மிருகண்டு என்னும் முனிவர் தாமும் இவ்விரு திருக்கோலங்களையும் ஒரு சேரக் காண வேண்டுமென்று எம்பெருமானைக் குறித்து தவமிருந்ததாக ஐதீஹம். அன்ன பானமின்றி கடும் விரதம் மேற்கொண்ட இம்முனிவரின் தவத்தை மெச்சிய பிரம்மன் நீர்வாமன, திருவிக்ரம திருக்கோலத்தைக் காண வேண்டுமாயின் கிருஷ்ண பத்திரா நதிக்கரையில் கிருஷ்ண க்ஷேத்திரத்தில், கிருஷ்ணன் என்ற பெயரில் பகவான் கோயில் கொண்டுள்ள இடமே நீர் தவம் செய்வதற்கு உகந்த

இடமாகும். எனவே அங்கு சென்று கடுந்தவம் புரிவதுடன் ஏழையெளியவர்கட்கும் வரையாது அன்னதானம் செய்ய வேண்டுமெனக் கூறினார்.

அதன்படி மிருகண்டு முனிவர் தமது துணைவியார் மித்ராவதியுடன் தென்புலத்துக் கிருஷ்ண ஷேத்திரத்தை அடைந்தார். பன்னெடுங்காலம் இவ்விதமே அன்னதானம் செய்து கடுந்தவமியற்றி வருங்காலை ஓர் நாள் மஹாவிஷ்ணு ஒருவயோதிக பிராம்மணர் ரூபத்தில் வந்து அன்னம் கேட்க, அப்போது தானம் செய்யக்கூட அன்னம் இல்லாத நிலைமையிருக்க தனது மனைவி மித்ராவதியை அணுகிய மிருகண்டு முனிவர் வந்திருக்கும் வேதியர்க்கு உடனடியாக அன்னம் படைக்க ஏதாவது செய்ய வேண்டுமென, கற்பிற் சிறந்த அப்பெண்மணி நாராயணனை நினைத்துப் பாத்திரத்தைக் கையிலெடுத்த மாத்திரத்தில் அதில் அன்னம் நிரம்பி வழிந்தது.

அதைப் பெற்றுக் கொண்டு பெருமகிழ்வோடு முனிவர் வெளியே வர பகவான் சங்கு சக்ரதாரியாக காட்சி தந்தார். வீழ்ந்து பணிந்த மிருகண்டு முனிவர் வாமன-திருவிக்ரம அவதாரத்தைத் தமக்கு காட்டியருள வேண்டுமென அவ்வண்ணமே திருமால் அருள் பாலித்த திருத்தலம் இத்திருக்கோவலூராகும்.

## மூலவர்

திரு விக்ரமன் - ஒரு காலைத் தரையில் ஊன்றி ஒரு காலை விண்ணை நோக்கித் தூக்கிய நிலை. கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம்.

இப்பெருமான் விராட் புருஷனாக இடது கையில் சக்கரம், வலது கையில் சங்கும் கொண்டு நீருண்ட மேகம் போன்ற திருமேனியுடன் மார்பில் ஸ்ரீவத்ஸம், கண்டத்தில் கௌஸ்துபம், காதுகளில் மஹாகுண்டலம், வைஜயந்தி வனமாலையுடன் தேஜோமயமாய் ஒளிரும் புன்னகையுடன் சுற்றியும் பிரகலாதன், மகாபலி, சுக்ராச்சார்யார், தேவர்கள், யட்சர்கள், சித்தர்கள், கருட வில்வக்ஸேநர் புடை சூழ ஸ்ரீதேவி, பூதேவி சமேதராய் எழுந்தருளியிருக்கிறார்.

## தாயார்

பூங்கோவல் நாச்சியார், புஷ்பவல்லி தாயார் என்னும் திருநாமங்கள்.

## உற்சவர்

ஆயன், ஆயனார், கோவலன் (கோபாலன்)

## தாயார்

கஜலெட்சுமி

## தீர்த்தம்

பெண்ணையாறு, கிருஷ்ண தீர்த்தம், சுக்ர தீர்த்தம்.

## விமானம்

சுர விமானம்

## காட்சி கண்டவர்கள்

மகாபலி, மிருகண்டு முனிவர், பிரம்மன், இந்திரன், குஷி, சௌனகர், காஸ்யபர், முதல் மூன்று ஆழ்வார்கள்.

## சிறப்புக்கள்

1) திருமால் திருவிக்ரம அவதாரம் எடுத்தபோது பூமியை அளந்த திருவடியை பூஜித்து பூமாதேவி பெருமையுற்றாள். விண்ணோக்கி சத்ய லோகம் சென்ற திருவடியை பூஜித்து பிரம்மன் பெருமை பெற்றான். தனது கமண்டல நீரால் பிரம்மன் பூஜித்த திருவடியில் பட்டுச் சிதறிய நீர்த்துளிகளே கங்கை கிருஷ்ணபத்திரா, சிலம்பாறு என்று புராணங்கள் புகழ்கின்றன. மூன்றாவது அடியால் மாவலியை பாதாளம் புகுத்தி அங்கும் பெருமாள் எழுந்தருளி காட்சி கொடுத்து பாதாள லோகத்திற்கு அருள் பாலித்தார்.

அதே அவதாரத்தை இத்தலத்திற்கும் செய்து காட்டியதால் மூன்று உலகங்களாலும் புகழ்பெற்றதாக விளங்குகிறது இத்தலம்.

2) இங்குதான் ஆழ்வார்கள் மூவரும் முதன் முதலாக பகவானைத் தூய தமிழ்ப் பாக்களில் பாடித் துதிக்க ஆரம்பித்தனர். அதுவே பின்னர் ஆழ்வார்களால் நாலாயிரத் திவ்ய பிரபந்தமாக விரிந்தது. முதலாழ்வார்கள் மூவரும் பல ஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருக்கோவலூரை அடைந்தனர். இவர்களை ஒன்று சேர்க்க எண்ணிய பகவான் பெரும் மழையைப் பெய்விக்கச் செய்தார். முதலில் வந்த பொய்கையாழ்வார் மிருகண்டு முனிவரின் ஆசிரமத்தை அடைந்து இரவு தங்குவதற்கு இடமுண்டோ வென்று வினவ முனிவர் ஒரு இடத்தைச்

சுட்டிக்காட்டி இங்கு ஒருவர் படுக்கலாம் என்று கூறிச் சென்றார். சற்று நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த பூதத்தாழ்வார் தமக்கும் தங்குவதற்கு இடம் உண்டோ வென்றார். ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாமெனக் கூறிய பொய்கையார் அவரை உள்ளே அழைத்துக் கொண்டார். சில வினாடிகளில் அவ்விடம் வந்து சேர்ந்த பேயாழ்வார் யாமும் தங்கவொன்னுமோ என்று கேட்க, ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம் என்று கூறி அவரையுஞ் சேர்த்துக் கொள்ள இட நெருக்கடிதாளாது முண்டிக்கொள்ள அப்போது நான்காவதாக மேலும் ஒருவர் வந்து மூவரையும் நெருக்குவது போன்ற உணர்வு உண்டாக, ஈதென்ன விந்தையென்று மூவரும் எம்பெருமானை ஒருங்கே நினைக்க, உடனே பேரொளியாய்த் தோன்றிய எம்பெருமான் தம் திருமேனியை மூவருக்கும் காட்டி அருள் புரிந்தார்.

**வையம் தகளியாய் என்று பொய்கையாரும்**
**அன்பே தகளியாய் என்று பூதத்தாழ்வாரும்**
**திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன்**

**என்று பேயாழ்வாரும்**

மங்களாசாசனங்களை பாடியுள்ளனர்.

**முதன்முதலில் ஆழ்வார்களால் பாடப்பட்ட திவ்யதேசம் இதுதான்.**

இங்கு ஆழ்வார்கள் மூவரும் பெருமாளை அனுபவித்ததை ஸ்ரீமந் நிகாமந்த தேசிகன் இப்படி வர்ணிக்கிறார்.

மூன்று ஆழ்வார்களாகிய கரும்பாலையில் மூன்று உருளைகள் கரும்பைப் பிழிவதைப் போல, தீங்கரும்பான எம்பெருமானை நெருக்கி அவருடைய திருக்குணங்களாகிய ரஸத்தைப் பருகுகிறார்கள்.

3) இந்த தலத்தில் கிருஷ்ணன் மகிழ்ந்துறைவதை யெண்ணிய துர்க்கை விந்திய மலையிலிருந்து புறப்பட்டு தானும் இவ்விடத்தே கோவில் கொண்டாள். துர்க்கைக்கு இங்கே கோவிலும், வழிபாடுகளும் உண்டு. இது மற்றெந்த திவ்ய தேசத்திற்கும் இல்லாச் சிறப்பம்சமாகும். திருமங்கையாழ்வார் இந்த துர்க்கையை ‘விந்தம் மேவிய கற்புடை மடக்கன்னி காவல் பூண்டகடி பொழில்’ என்று புகழ்கிறார்.

4) கிருஷ்ணாரண்யத்திலும், ஸ்ரீமுஷ்ணத்திலும் நான் பக்தர்களுடனே சஞ்சரித்துக் கொண்டே இருக்கிறேன். என்று பகவானால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட இத்திவ்ய தேசத்தை முதலாழ்வார்கள் மூவரும் திருமங்கையாழ்வாரும் பாசுரங்களில் மங்களாசாசனம் செய்துள்ளனர். மணவாள மாமுனிகளும் மங்களாசாசனம் செய்துள்ளார். சுவாமி தேசிகரால் இயற்றப்பட்ட ‘தேஹளிசஸ். துதி’ இப்பெருமாளுக்கு அளிக்கப்பட்ட பக்திரசம் ததும்பிய பாமாலையாகும்.

5) பரசுராமர் இங்கு தவம் செய்தாரென புராணங்கூறும். அகத்தியர் இங்கு தவமியற்றினாரென தமிழிலக்கியங்கள் கூறும். முற்காலப் பல்லவமன்னர்களாலும், கிருஷ்ண தேவராயராலும் திருப்பணிகள் செய்யப்பட்ட ஸ்தலம்.

6) இங்கு தவம் செய்துகொண்டிருந்த முனிவர்களை பிரம்மனிடம் கொடிய வரங்களைப் பெற்ற பாதாள கேது என்னும் அரக்கன் துன்புறுத்தியதாகவும், முனிவர்களால் வேண்டப்பட்ட நிலையில் குசத்வ ராஜன் என்னும் மன்னன் ஆகாயத்திலிருந்து திருமாலால் அனுப்பப்பட்ட குதிரையிலேறி அவ்வரக்கனைக் கொன்று தானும் மோட்சம் பெற்றாரென பிரம்மாண்ட புராணங்கூறுகிறது.

7) கிருஷ்ண பத்திரா நதிதான் இங்கு ஓடும் பெண்ணையாறாகும். வெண்ணெய் உருகுமுன் பெண்ணை உருகும் என்று சிறப்பிக்கப்பட்ட நதியாகும். பிரம்ம புராணத்தின் பஞ்ச கிருஷ்ண ஷேத்திரங்களுள் ஒன்றாக இது குறிக்கப்படுகிறது. பஞ்ச கிருஷ்ண ஷேத்திரங்கள்.

1. திருக்கோவலூர்    2. திருக்கண்ணங்குடி

3. திருக்கவித்தலம்    4. திருக்கண்ணபுரம்

5. திருக்கண்ணமங்கை

8) இந்த ஸ்தலம் தான் திவ்ய பிரபந்தத்திற்கு விளை நிலமாகும். உலகில் முக்கியமாக, ஒரு ஜீவன் மிக முக்கியமாக அறிய வேண்டிய ரகசியங்களான திருமந்திரம், துவயம், சரமச் லோகார்த்தம், முதலியவைகளை மூன்று பிரபந்தங்களாக முதல் மூன்று ஆழ்வார்கள் இங்கு வெளியிட்டருளியமையால் இத்தலம் ஜீவாத்மாக்கள் கடைத்தேற வித்திட்ட விளைநிலமாகும். ஆழ்வார்களின் மங்களாசாசனத்திற்கு அடிகோலிய ஸ்தலமாகும்.

திருவிளக்கு ஏற்றல் என்ற வியாஜ்யத்தாலே பொய்கை யாழ்வார் மறையின் குருத்தின் பொருளையும், செந்தமிழ் தன்னையும், ஒன்றாய்க் கூட்டி திரித்து ஒரு திருவிளக்கு ஏற்றினார் என்பர் இத்தலத்து ஜீயர் சுவாமிகள்.

9) இடைகழியில் ஆழ்வார்கட்கு எம்பெருமான் காட்சி கொடுத்ததால் இத்தல பெருமாளுக்கு இடைகழி ஆயன் என்னும் பெயர் உண்டு. நடுநாட்டின் முதலாவது ஸ்தலமாகையாலும் விண்ணுலகிற்கும், பாதாள லோகத்திற்கும் நடுவுபட்டு நின்றமையால் நடுநாட்டான் என்னும் பெயர் வந்தது என்பர்

10) இங்கு தற்போதுள்ள எம்பெருமானார் ஜீயர் சுவாமிகளின் ஒரு பணி இராமானுஜரையே நினைவுபடுத்துகிறது. நாராயண மந்திரத்தை அனைவர்க்கும் உபதேசித்து அரிஜனங்களை திருக்குலத்தார் என்று பெயரிட்டு அழைத்து அவர்களை வைணவ அடியார்களாக்கினார் இராமானுஜர். அதுபோல் இந்த ஜீயர் சுவாமிகளும், ஆயிரக்கணக்கான அரிஜன சகோதரர்கட்கு தீட்சை அளிக்கிறார். அதாவது வருடாவருடம் தமது திருமாளிகையில் சமபந்தி போஜனம் அளிக்கிறார். சமபந்தி போஜனம் எப்போதோ தோன்றிவிட்டது பார்த்தீர்களா?

11) மிருகண்டு முனிவர்கட்கு திருவிக்ரம அவதாரத்தைக் காட்டிக் கொடுக்கும் முன்பு கிருஷ்ணனாக பகவான் எழுந்தருளியிருந்த சன்னதி தற்போது இத்தலத்தின் முன்புறத்திலேயே அமைந்துள்ளது. ஆதி சன்னதி

இதுதான். சாளக்கிராமத் திருமேனியுடன் இவர் பொலிந்து தோன்றுகிறார்.

12) இப்பெருமாளை,

**"ஆரானும் கற்பிப்பார் நாயகரே தானவனைக்**
**காரார் திருமேனி காணும் அளவும் போய்**
**சீரார் திருவேங்கடமே, திருக்கோவலூரே"**

என்று திருமங்கையாழ்வார் தமது திருமடலில்

இப்பெருமானின் சிறப்பினையெடுத்தியம்புகிறார்.
தொண்டைநாட்டுத் திவ்ய தேசங்கள் ஒரு விளக்கம்

**மேற்குப் பவளமலை வேங்கடம் நேர் வடக்காம்**
**ஆர்க்கு முவரி யணிகிழக்கும் – பார்க்குளுயர்**
**தெற்குப் பினாகி திகழிருபதன் காதம்**
**நற்றொண்டை நாடெனவே நாட்டு**

- **பெருந்தொகை** 2102

தொண்டை நாடென்பது வடவேங்கடம் முதல் புராணங்களிலும் வடநூல்களிலும் பினாகி எனக் குறிக்கப்படும் தென்பெண்ணையாற்றை தெற்கெல்லையாகவும், கிழக்கே கடலையும், மேற்கே பவள மலையினையும் எல்லையாகக் கொண்டு விளங்கிய பெரு நிலப்பரப்பு. மிகப்பழங்காலத்தில் தொண்டைநாடு குறும்பர் நிலம் எனப்பட்டது. குறும்பர் தம் ஆடுமாடுகளை மேய்த்துக் கொண்டு அங்கு வாழ்ந்தனர். இவர்கள் தம் நாட்டை 24 கோட்டங்களாக வளர்த்தனர் என்பர் வரலாற்றாசிரியர். இந்நாடு சங்க காலத்தில் அருவா நாடு எனப்பட்டது. இதன் வடபகுதியை அருவா வடதலை

நாடென பழந்தமிழ் இலக்கியங்கள் குறிக்கின்றன. இது மலைவளமும் நாட்டு வளமும் மிக்கது. கரிகாலன் இதைக் கைப்பற்றி காடு கெடுத்து நாடாக்கினான். பின்னர் தொண்டைக் கொடியால் சுற்றி கடல்வழி வந்த நாக கன்னிகையான பீலிவளயின் மகனான இளந்திரையன் ஆண்டதால் தொண்டை மண்டலம் எனப் பெயர் பெற்றதாக தமிழ் நூல்களால் அறிகிறோம்.

தொண்டை மண்டலத்தில் வடபகுதியான அருவா வடதலை நாட்டை திரையன் ஆண்டான். அவன் தலைநகர் பவத்திரியாகும். இளந்திரையன் என்பான் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தென்பகுதியை ஆண்டு வந்தான்.

இத்தொண்டை நாட்டின் மிகச்சிறந்த துறைமுகமாக கடன்மல்லை (மாமல்லபுரம்) விளங்கியது. மாமல்லபுரத்தைப் பற்றி பெரும்பானாற்றுப்படை அரிய செய்திகளை வழங்குகிறது.

ஆனால் இன்றைய தமிழ்நாட்டில் தொண்டை நாடு என்றதும் நமக்கு நினைவுக்கு வருவது காஞ்சி மண்டலமேயாகும். பண்டைக் காலந்தொட்டே இலக்கியங்களாலும், புராணங்களாலும் புகழ்மாலை சூட்டப்பட்ட ஒன்றே காஞ்சி மாநகரத்தின் தொல் புகழுக்குச் சான்றாகும். நகரமென்றாலே காஞ்சிதான். 'நகரேஷு காஞ்சி' என்பர். புண்ணிய நகரங்களில் இதுவும் ஒன்றாகும்.

**'அயோத்யா மதுரா மாயா காஸி காஞ்சி**
**அவந்திகா புரி த்வராவதிசைவசப்த ஏகா மோசஷதாயகா'**

இந்த 7 நகரங்களில் வசிப்பவர்கட்கும், இங்குள்ள எம்பெருமானைத் தரிசிப்பவர்கட்கும் முக்தி உண்டாகுமெனப் புராணங்கள் கூறுகின்றன. பூமாதேவி இடுப்பில் அணியும் ஒட்டியாணம் போன்ற பகுதியாக இந்நகரம் திகழ்வதால் காஞ்சியெனப் பெயர் வந்ததாய்க் கூறுவர். இடையில் அணியக்கூடிய அணிகலனுக்கு காஞ்சி என்ற பெயரும் இருந்தது.

வயல்கள் நிறைந்த நாடென்றும், சான்றோர் நிறைந்த நாடென்றும் ஔவையாரால் போற்றப்பட்ட இந்த தொண்டை நாட்டுக்கு காஞ்சி பிரதானமான தலைநகரமாகத் திகழ்ந்தது.

'தெண்ணீர் வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து' - என்பது ஔவையார் வாக்கு.

பண்டை இந்தியாவிலும் சரி, இன்றைய தமிழ்நாட்டிலும் சரி இந்தக் காஞ்சி ஒரு புண்ணிய பூமி. அறிஞர் பெருமக்களும், ஆய்வாளர்களும், ஞானிகளும், சமயவல்லுநர்களும், கலைத்திறன் மிக்கோரும் மண்டிக்கிடந்து புகழ் சேர்த்த பூமியாகும். இன்றும் இது தொடர்கதையாகக் கொண்டிருக்கிறது.

இன்னிசைக் கருவிகளில் இசையுடன் ஆடல் பாடலுடன் சேர்ந்து எந்நேரமும் கலையழகு பொருந்த திகழ்ந்தது இக்காஞ்சி மாநகர் என்று திருஞான சம்பந்தர் கூறுகிறார்.

**முழவம் மொந்தை குழல்யாழ் ஒலி**
**சீராலே பாடல் ஆடல் சிதைவில்லாதோர்**
**ஏரார் பூங்காஞ்சி –**

(என்பர் ஞானசம்பந்தர்)

இந்நகர் (இந்த ஊர்) ஒரு சக்ரவடிவில் அமைந்துள்ளது. ஸ்ரீசக்கரத்தில் நவாவரண தேவதைகள் என்னும் சக்திக் கணங்கள் எப்படி நிறைந்திருக்கின்றனவோ அப்படி காஞ்சியில் அனைத்து தேவதைகளும் நிறைந்திருக்கின்றனர்.

தொண்டை மண்டலத்தின் திலகமான இந்தக் காஞ்சியில் தொண்டை மண்டலத்து 22 திவ்ய தேசங்களில் 14 திவ்ய தேசங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தப் பெருமை இந்தியாவில் வேறெந்த நகரத்திற்குமில்லை. திவ்யம் கொட்டிக்கிடக்கும் நகரமாகும் இது. எம்பெருமானின் ஸாமீப்யம் இந்த ஊருக்கு மிகவும் சுலபம்.

ஆறோடு ஈரெட்டு தொண்டை எனப்பட்ட 22 தொண்டை நாட்டுத் திவ்ய தேசங்கள் எவையெனக் காண்போமாயின்.

**அந்தமா மத்தியூர் அட்டபுயக் கரம்
விந்தை தன்கா வேளுக்கை பாடகம்
நீரகம் புனித நிலாத்திங் கட்த்துண்டம்
ஊரகம் வெஃகா வுடனே காரகம்
வந்துலாவுங் கார்வானங் கள்வனூர்
பந்த மகற்றிடும் பவள வண்ணமே
தொன்மை யாம்பர மேச்சுர விண்ணகரம்
நின்மலப் புட்குழி நின்றவூ ரெவ்வுள்ளூர்.
நீர்மலை இடவெந்தை நீர்க்கடன் மல்லை
சீர்மிகு மல்லிக்கேணி சிறந்ததாங் கடிகை
எண்டிசை புகழுமிவ் விருபத்தி யிரண்டு
தொண்டை நாட்டுப் பதி தொழுது போற்றுவோம்.**

இந்த 22 இல் காஞ்சி மாநகரில் மட்டும் 14 திவ்ய தேசங்கள் உள்ளன.

பெரிய காஞ்சியில் உள்ள திவ்ய தேசங்கள்

1. திருப்பாடகம் 2. திருநிலாத்திங்கள் துண்டம்

3. திரு ஊரகம் 4. திரு நீரகம்

5. திருக்காரகம் 6. திருக்கார்வானம்

7. திருக்கள்வனூர் 8. திருப்பவளவண்ணம்

9. திருப்பரமேச்சுர விண்ணகரம்.

சின்னக் காஞ்சி எனப்படும் சிறிய காஞ்சியில் உள்ள திவ்ய தேசங்கள்

1. திருக்கச்சி 2. திருஅட்டபுயக்கரம்

3. திருத்தண்கா 4. திருவேளுக்கை

5. திருவெஃகா

மீதியுள்ள 8 திவ்ய தேசங்களை எடுத்துக் கொண்டால் அவைகள் மிகச் சிறப்பான வரலாற்றுச் சிறப்பும், வைணவம் உயர்ந்தோங்கிய நகரங்களிலும் அமைந்து தொண்டை மண்டல திவ்ய தேசங்கட்கு அரண்போல் விளங்குகின்றன.

திருவல்லிக்கேணியை எடுத்துக் கொண்டால் மாநிலத்தின் தலைநகரிலேயே அமைந்து அழகு சேர்க்கிறது.
திருவிடவெந்தையை எடுத்துக் கொண்டால் அங்கே எழுந்தருளியிருப்பதைப் போன்ற வராஹமூர்த்தி

வேறெங்கும் இல்லையென்று சொல்லுமளவிற்கு அமைந்துள்ளது. கடன் மல்லையை எடுத்துக்கொண்டால் அதன் கலைச் சிறப்பும் பக்திச் சிறப்பும், கடல்ச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் வேறெந்த திவ்ய தேசத்திற்கும் அமையவில்லையென்று அறுதியிடலாம்.

திருப்புட்குழியை எடுத்துக் கொண்டால் ஸ்ரீஇராமானுஜரின் முதல் குருவாக விளங்கிய யாதவப் பிரகாசர் ஜெனித்த ஊராகவும், இராமானுஜருக்கு வித்யாரம்பம் துவங்கிய ஊராகவும் அமைகிறது. திருநீர்மலையை எடுத்துக்கொண்டால் வேறெந்த திவ்ய தேசத்திலும் இல்லாதவாறு திருமங்கையாழ்வார் 6 மாத காலம் தங்கியிருந்து தரிசித்த பெருமை பெற்றுத் திகழ்கிறது.

திருக்கடிகையை எடுத்துக்கொண்டால் ஸ்ரீஆஞ்சநேய மூர்த்தி இன்றும் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கும் பெருமையை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. திருஎவ்வுள் (திருவள்ளூர்) வீரராகவப் பெருமாளை எடுத்துக்கொண்டால், எம்பெருமான் வந்து படுப்பதற்கு தேடிக்கொண்ட இடமாகிறது. திருநின்றவூர்ப் பெருமாளை எடுத்துக்கொண்டால் அவர் பக்தர்கட்கு ஆவிபோன்று, பத்தராவிப் பெருமாளாகத் திகழ்கிறார்.

திவ்ய தேசங்களின் புகழோடு இம்மண்டலம் நின்றுவிடவில்லை. ஆழ்வார்களில் நால்வரின் அவதார ஸ்தலங்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. முதலாழ்வார்கள் மூவரும், திருமழிசையாழ்வாரும் அவதரித்த மண்டலம் என்னும் பெருமை கொண்டது.

1. பொய்கையாழ்வார்

காஞ்சியில் உள்ள திருவெஃகாவென்னும் திவ்ய தேசத்தில் அவதரித்தார்.

2. பூதத்தாழ்வார்

கடன்மல்லை எனப்படும் மகாபலிபுரத்தில் அவதரித்தார்.

3. பேயாழ்வார்

சென்னையில் உள்ள திருமயிலையில் அவதரித்தார்.

4. திருமழிசையாழ்வார்

சென்னைக்கு அருகேயுள்ள திருமழிசை என்னும் ஊரில் அவதரித்தார்

இது மட்டுமா பெருமை. ஸ்ரீவைஷ்ணவ ஆச்சார்ய பரம்பரையில் நடுநாயகமாகவும், திருவரங்கச் செல்வத்தைத் திருத்திப் பணி செய்தவருமான எம்பெருமானாரையும் ஸ்ரீவைஷ்ணவத்தின் ஒரு கண்ணாக விளங்கும் வடகலை ஸம்பிரதாயத்தில் முக்கிய ஆச்சாரியரான ஸ்வாமி வேதாந்த தேசிகனையும் ஈந்து வான் முட்டும் பெரும்புகழடைந்து இலங்குகிறது.

காஞ்சி வரதராஜனுக்குத் திரு ஆலவட்ட கைங்கர்யம் செய்து வந்தவரும் தனது ஆச்சார்யனாக ஏற்றுக்கொள்ள விழைந்த இராமானுஜருக்கு தேவப்பெருமாள் அருளிச் செய்த ஆறு வார்த்தைகளைக் கூறி பெரியநம்பியை அடையுமாறு கூறிய திருக்கச்சி நம்பிகள் அவதரித்த பூவிருந்தவல்லி என்ற பூந்தமல்லி, எம்பெருமானால் கற்பிக்கப்பட்ட வைணவ பாதைகளையும், காத்து வந்த

கீழ்க்கண்ட ஆச்சார்ய புருஷர்களையும் இவ்வுலகிற்குத் தந்தருளியதும் இத்தொண்டை மண்டலம் தான்.

1. எம்பார் அவதரித்த மதுரமங்கலம்

2. முதலியாண்டார் அவதரித்த பேட்டை எனப்படும் வரதராஜபுரம்

3. கூரத்தாழ்வான் அவதரித்த கூரம்

இவர்கள் மட்டுமென்ன எங்களுக்கும் பங்கில்லையா என்று இம்மண்டலத்தின் ஊடே பாய்ந்து இதன் செழுமைக்கும் சிறப்புக்கும் மெருகேற்றும் நதிதேவதைகள் நால்வருண்டு.

1. சக்ஷிர நதி எனப்படும் பாலாறு


2. பாகு நதி எனப்படும் செய்யாறு

3. வேகவதி எனப்படும் சரஸ்வதி நதி

4. கமண்டல நதி எனப்படும் கம்பா நதி.

இப்பேர்ப்பட்ட தொண்டைமண்டலத்தின் சிறப்புக்களைச் சொல்லிக் கொண்டே செல்லலாம். மற்ற மண்டலங்களைவிட இம்மண்டலம் மிகு புகழ் படைத்துள்ளதென்றால் அது மிகையன்று.

இனி உள்புகுந்து எம்பெருமான்களின் திவ்ய தேசங்களில் உலா வரலாம்.


Thirukoilur - Vettavalam Main R
Manampoondi
Arakandanallur
Thapovanam
Then Pennai River
Thirukoilure
Anthili
Sandapet
Then Pennai River
Aviyur
Vadaku Nemili
Aavi
Kolapakkam
Lake
Vinmar
9
7
68
211
Google
Map data ©2015 Google